# தினசரி சந்தை நிலவரம் : இலாபம் தரும் ஈட்டி தரும் ஓர் திட்டம்

K.சதாசிவம்
த/பெ கத்தாலை கவுண்டர்
வடக்கு காடு, நடுவலூர் (Po)
ஆத்தூர் (Tk), சேலம் (Dt) - 636112
செல்: 9443022026



என் பெயர் K.சதாசிவம். நான் நடுவலூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நான் சிறுவயதிலிருந்தே விவசாயம் செய்து வருகிறேன். என் தோட்டத்தில் பழம் மற்றும் காய்கறிகளை பயிர் செய்து வருகிறேன். குறிப்பாக சப்போட்டா, கொள்ளாவை பயிர் செய்து வருகிறேன். நான் மேலும் கத்தரிக்காயும் பயிர் செய்கிறேன். கத்திரியில் பவானி மற்றும் பச்சை நீள கத்தரிக்காயும் பயிர் செய்கிறேன். இதை எல்லாம் தலைவாசல் தினசரி காய்கறி சந்தையில் விற்று வருகிறேன். எனக்கு ஏற்கனவே தமிழ்நாடு வேளாண் துறையை பற்றி நன்கு தெரியும். நீங்கள் அறிவித்த முக்கிய சந்தைகள் பற்றி எனக்கு முன்பு ஆறு சந்தைகள் என தெரியும். இப்போது நீங்கள் அறிவித்த புதிய ஏழு சந்தைகள் மொத்தம் பதிமூன்று (13) முக்கிய சந்தைகள் உள்ளது என நீங்கள் நியமித்த பாலாஜி அவர்களிடம் தெரிந்து கொண்டேன். இணையதளம் மற்றும் கைப்பேசி மூலம் நீங்கள் அறிவிக்கும் முன்அறிவிப்பு மிகவும் பயனுள்ளதாக விவசாயிகளுக்கும் எனக்கும் அவசியமாக உள்ளது என கருதுகிறேன். இது எனக்கும் விவசாயிகளுக்கும் இலாபம் தரும் அறிய வாய்ப்பாக அமைகிறது.

இதனால் நான் மட்டும் அல்லாது வியாபாரிகள் indg பற்றிய தகவல்கள் அனைத்தும் அவசியமாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். தலைவாசல் சந்தையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தமது காய்கறிகளை விற்பனை செய்கின்றனர். நீங்கள் தெரிவிக்கும் குறுந்தகவல் சற்று முன்பாக அனுப்பினால் உபயோகமாக இருக்கும்.

நான் தற்போது 1.00 ஏக்கரில் கொய்யா கனிகளை பயிர் செய்து வருகிறேன். எனக்கு முன்பு மிளகாய் பற்றி குறுந்தகவல் வந்து கொண்டு இருந்தது. தற்போது நான் கொய்யா நிலவரம் மாற்றிக்கொண்டு நிலவரத்தினை தெரிந்து வருகிறேன். நான் இத்தகவலை வைத்துக்கொண்டு மேலும் 3(மூன்று) ஏக்கர் பயிர் செய்யலாம் என முடிவெடுத்து இருக்கிறேன். எனக்கு மொத்தம்

ஒன்பது (9) ஏக்கர் பரப்பளவு உள்ளது. நான் இதில் தென்னை, பாக்கு மற்றும் சப்போட்டா ஆகிய அனைத்தையும் பயிரிட போகிறேன்.

எனது சந்தேகத்தினை வேளாண் பல்கலைக்கழகத்தில் நிவர்த்தி செய்து வருகிறீர்கள். இது எனக்கு மிகவும் திருப்திகரமாக உள்ளது. இதை மக்கள் அறிந்து விவசாய பல்கலைக்கழகத்தின் நன்மைகளை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் KVK அறிவிக்கும் கூட்டத்திற்கும் சென்று வருகிறேன். இதில் எல்லா சந்தேகங்களையும் நிவர்த்தி செய்கிறார்கள். விவசாயிகளுக்கு தினசரி நிலவரம் கைப்பேசிக்கு வருகிறது. இந்த நிலவரத்தினை ஆங்கிலத்தில் தெரிவிக்கிறீர்கள். இதை நான் மற்றும் சிலர் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் படிப்பறிவில்லா விவசாயிகளால் அதன் ரகம் மார்க்கெட்டின் பெயர்கள் சரியாக தெரிவதில்லை. ஆகையினால் இதை தமிழில் தெரிவித்தால் பலர் தமிழில் தெரிந்து பயனடைவார்கள்.

நான் தற்போது விளைந்து வரும் கொய்யா இரண்டு முதல் மூன்று கூடைகளில் தலைவாசல் மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகிறேன். நான் மேலும் எனது தோட்டத்தில் விரிவுபடுத்தி ஏற்றுமதி செய்யலாம் என யோசித்து வருகிறேன். இதன் பயன் இன்றியமையாத பயனாக உணர்கிறேன்.

இதுபோன்று நான் மட்டும் அல்லாது எல்லா விவசாய பெருமக்கள் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெற்று முன்னேற்றம் அடைவோம் என்று கூறி இந்த வாய்ப்பினை கொடுத்த எல்லா அதிகாரிகளுக்கும் எனது அன்பார்ந்த நன்றியினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.